DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 445/2021
*****

Deposition of Witness for Prosecution witness No: PW1

| | | |
|---|---|---|
| பட்டியல் சாட்சி | | LW1 |
| Name | : | **லட்சுமிநாராயணன்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 20.02.2024 |

**( A1, A2 are present )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து லாரி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு எனது அம்மா வீட்டிற்கு முன்பு கசகச என்று சத்தம் கேட்டதனால் போலிசாருக்கு தகவல் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் எழுதப்படாத வெள்ளைப்பேப்பரில் தான் கையொப்பம் போட்டு கொடுத்தேன். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் 1ம் எதிரி உங்கள் மகளை விரும்வுவதாகவும் இது சம்பந்தமாக எனக்கும் 1ம் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்ததாகவும், அது சம்பந்தமமாக 01.06.2019 அன்று மதியம் 1.30 முதல் 3 மணி வரை எதிரிகள் மது அருந்திவிட்டு உங்கள் வீட்டில் தகராறு செய்ததாகவும், நீங்கள் சத்தம் போடவும் அவர்கள் சென்று விட்டதாகவும், மீண்டும் 5 மணிக்கு எதிரிகள் உங்கள் வீட்டின் முன்பு நின்று அபாசமாக பேசியும், நீங்கள் வெளியில் வந்து எதற்காக அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு 1ம் எதிரி இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து இதோடு செத்து தொலை என்று கூறி குத்தியதாகவும், நீ்ங்கள் விலகியதால் அந்த குத்து வீட்டின் சுவரில் பட்டதாகவும், நான் உயிர் தப்பிதாகவும் ,எதிரிகள் அபாசமாக பேசிக்கொண்டு, தப்பிக்கும் போது சரவணன் எதிரி சிக்கியதாகவும் மற்றவர் ஓடிவிட்டதாகவும், இது சம்பந்தமாக போலிசாரிடம் புகார் கொடுத்தாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது பிறழ்சாட்சியம் அளிக்கீறீர்கள் என்றால் மறுக்கிறேன்.

**ம.வி இல்லை.**